OS.No.310/2013 – 16.04.2025

PW1 – ராமசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 13 முதல் 17, 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2வது அயிட்ட சொத்தின் மொத்த பரப்பளவு என்ன என்றால் 1 ஏக்கர் 90 செண்ட் அல்லது 1 ஏக்கர் 95 செண்ட்டிற்குள் இருக்கும். மேற்படி சொத்திற்கு 4 பக்க எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. 2வது அயிட்ட சொத்தில் உள்ள தென்னை மரங்களை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் 1,2 பிரதிவாதிகளின் வகையராக்கள் மாறி மாறி அனுபவித்து வருகிறார்கள். 2வது அயிட்ட சொத்தை யார் யாரிடமிருந்து எவ்வளவு விலைக்கு வாங்கினார்கள் என்றால் தெரியாது. யார் வாங்கினார்கள் என்றால் வனவாசி பிரசிடண்டும் என் அம்மாவின் அப்பாவும் வாங்கினார்கள்.

கந்தசாமி என்பவர் பழனியப்பனின் மகன் என்றால் சரி. வா.சா.ஆ.8ல் கந்தசாமியின் பெயரில் தனி பட்டாவாக உள்ளது என்றால் யூடிஆர்–ல் போட்டிருப்பார்கள். 2 அயிட்ட சொத்துக்களின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் நான் மறந்துவிட்டேன். மொத்த சொத்தில் 5 மெத்தை வீடுகள், ஒரு வில்லை வீடு உள்ளது என்றால் 4 மெத்தை வீடுகள், 2 வில்லை வீடுகள் உள்ளது. கிணறுகளுக்கு மொத்தம் எத்தனை மின் இணைப்புகள் உள்ளது என்றால் 3

கிணறுகளுக்கு மின் இணைப்புகள் உள்ளது.

மொத்த கிணற்றிலும் ஒரு போர்வெல் உள்ளது. அதற்கு மின்சார இணைப்பு இல்லை. 3 கிணறுகளுக்கு மின் இணைப்புகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1,2 அயிட்ட சொத்துக்களும் என் அம்மாவின் தாத்தா செங்கோட கவுண்டர் உயிருடன் இருக்கும்போதே சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. அவர் பாகம் பிரித்து கொடுத்த பிறகு அந்தந்த சொத்துக்களுக்கு தனி பட்டாவும், வருவாய் ஆவணங்களும் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் யார் யார் பெயரில் வருவாய் ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறதோ அவரவர்கள் அந்தந்த சொத்தை தனியாக அனுபவமும் சுவாதீனமும் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. எனக்கு பிரித்து கொடுத்த சொத்திற்கும் வருவாய் ஆவணங்கள் மற்றும் சுவாதீனம் மற்றும் தனி பட்டா எனது பெயரில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் இல்லை. எனக்கு தனி பட்டா ஆன சொத்தில் சுமார் ஒன்னரை கோடி அளவில் நான் வீடு கட்டி தனியாக அனுபவம் செய்து வருகிறேன் என்றால் அனைவரும் தனித்தனியாக வீடு கட்டி வருகிறோம், ஆனால் பாகபிரிவினை செய்யும்போது யார் யார் வீடு கட்டி உள்ளார்களோ அவர்களுக்கு அந்த பாகத்தை ஒதுக்க வேண்டும் என்று பேசி முடிக்கப்பட்டது. அதற்கு எழுத்து மூலமாக ஒப்பந்தம்

உள்ளதா என்றால் வாய்மொழி ஒப்பந்தம்தான்.

வாதி, பிரதிவாதிகளுக்கு சொத்து விவரத்தில் பரவலாக தனியாக வீடுகள் உள்ளது என்றால் சரி. வீடு கட்டும்போது மேற்சொன்ன வாய் மூல ஒப்பந்தம் குறித்து எனது வழக்கில் வாதுரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்யும்போது தாவாவில் உள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதையும் தெளிவாக நான் குறிப்பிடவில்லை என்றால் வீடு, தென்னந்தோப்பு, மின் இணைப்பு, கிணறு ஆகியவற்றை காண்பிக்கவில்லை.

வழக்கு சொத்தில் எனக்கு எவ்வாறு உரிமை மூலம் ஏற்பட்டுள்ளது என்ற விவரத்தை நான் வாதுரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எப்போதும் கூட்டு அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே அவரவர்களுக்கு ஏற்ற பாகம் ஏற்பட்டு அவரவர்கள் தனியாக அனுபவம் செய்து அவரவர்களுக்கு வருவாய் ஆவணங்கள் தனித்தனியாக மாற்றப்பட்டு, வழக்கு சொத்து பராமரிக்கப்பட்டு வருவதால் தற்போது மற்றவர்களின் சொத்தில் பாக உரிமை கோர எனக்கு எவ்வித அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. சொத்தைப்பற்றி எனக்கு எந்தவிவரமும் தெரியவில்லை என்றும், ஆவணங்களை தயார் செய்து அந்த ஆவணத்தின் அடிப்படையில் மட்டுமே புதியதாக உரிமை இல்லாமல் தவறுதலாக

உரிமை கோரி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1960ம் ஆண்டு பத்திரத்தின் அடிப்படையில் பாக உரிமை கோருவதால் அந்த பத்திரத்தில் சொத்துக்களை வாங்கியவர்களின் வாரிசுகள் அனைவரையும் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சேர்க்க வேண்டிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற காரணத்திற்காக வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் என்னுடைய தனி சொத்தை தவிர மற்ற சொத்துக்களில் எவ்வித உரிமையும் கோருவதற்கு எனக்கு அருகதையில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் காணப்பட்டு அவரவர்களுக்கு தனி உரிமை கொடுத்த பின்பு மீண்டும் ஒரு பாக வழக்கு மற்றும் உரிமை கோர எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

நான் இந்த நீதிமன்றத்திற்கு தூய கரங்களுடன் நிவாரணம் கோரி வராததால் இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுடன் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக நான் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal District Judge, Salem.